08.01.2024

O.S.No.363/2012

பி.வா.சா.1 .திருமதி ஜெகதீஸ்வரி . க.பெ.செந்தில்குமார்

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

குறுக்கு விசாரணை தொடர்ச்சி

1. அய்யாவு என்பவர் வாதியின் முன் பாத்தியஸ்தர் என்றால் சரிதான். அய்யாவு-ன் கிரைய பத்திரத்தினை பி.வா.சா.ஆ-2 ஆக நான் குறியீடு செய்துள்ளேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ-2 ஆவணத்தின் சொத்து விவரத்தில் கண்டுள்ள நான்குமாலில் வடபுறம் பிச்சை பாக காலியிடமும், வீடும், கீழ்புறம் பூக்காயி வீடு, தென்புறம் தங்கள் மனைவி முருகன் என்பவரிடம் கிரையம் பெற்றுள்ள ஓட்டுவீடும், காலியிடமும், மேல்புறம் தவமணி வீடும், இடமும் இதற்குள்பட்டது என காணப்படுகிறது என்றால் சரிதான். அதன் தொடர்ச்சியாக கிழமேல் ஜாதியடி 15, தென்வடல் ஜாதியடி 19 உள்ளதும், மேற்படி இடத்திற்கு தென்புறமும், தவமணி வீட்டிற்கும், காலியிடத்திற்கும் மேல்புறமும் உள்ள சந்து பாதையை வழக்கம் போல் தாங்கள் எனக்குள்ள ரைட்டுப்படி அனுபவித்துக்கொள்ள வேண்டியது என்று காணப்படுகிறது என்றால் சரிதான். மேற்படி பி.வா.சா.ஆ-2 ஆவணத்தில் கண்டுள்ள சொத்தைதான் வாதி கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான்.

2. என்னிடம் காட்டப்படும் எதிர்வழக்குரை எனது தாயார் ஜெயலட்சுமி தாக்கல் செய்த எதிர் வழக்குரை என்றால் சரிதான், அதில் காணப்படும் கையொப்பம் எனது தாயாரின் கையொப்பம் என்றால் சரிதான். மேற்படி எனது தாயார் தாக்கல் செய்த எதிர் வழக்குரையில் 3வது பத்தியில் 13.05.1977 தேதியில் அய்யாவு கிரையம் பெற்ற கிழமேல் ஜாதியடி 15,தென்வடல் ஜாதியடி 19 உள்ள இடத்திற்கு தென்புறமும், தவமணி வீட்டிற்கும், காலியிடத்திற்கும் மேல்புறம் உள்ள சந்து பாதையை வழக்கம் போல் புழங்கிக்கொள்ளலாம் என அந்த கிரைய ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளதாக காணப்படுகிறது என்றால் சரிதான். தாவா சொத்து அய்யாவு கிரையம் வாங்கிய சொத்திற்கு தென்புறம் உள்ள சந்துதான் என்றால் சரிதான். எனது வீடு தென்புறம் பார்த்து உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கு வடபுறம் தான் தாவா சந்து உள்ளது.

3. இந்த தாவாசொத்து எனது வீட்டிற்கு பின்புறம் உள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கு தென்திசை நோக்கி வாசல் வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது வீட்டிற்கு தென்புறத்தில் கிழமேலாக 3 அடி அகலத்திற்கு நாங்கள் சென்று வருவதற்காக பாதை விட்டுள்ளோம் என்றால் சரிதான். மேற்படி 3 அடி அகல பாதை என்பது எனது வீட்டு வாசலில் இருந்து பிராதன சாலைக்கு செல்வதற்கு எனது புழக்கத்திற்காக விட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்சொன்ன 3 அடி அகல பாதையில் வாதி தாவா எதுவும் செய்யவில்லை என்றால், வாதி மேற்படி 3 அடி அகல பாதையில்தான் அவர்களுக்கு பாதை இருக்கிறது என பிரச்சினை செய்து வருகிறார். எனது வீட்டிற்கு வடபுறம் உள்ள தாவா சொத்தான சந்து பாதைக்கு தென்புறம் வாதி மல்லிகா குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். எனது தாயார் எதிர்வழக்குரையில் 4வது பத்தியில் சொல்லி உள்ள சந்து பாதைக்கும், தாவா சொத்திற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல, எங்கள் வீட்டிற்கு முன்பு உள்ள பாதையில் தான்

அவர்களுக்கு உரிமை இருப்பதாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள், எங்கள் வீட்டிற்கு பின்புறம் உள்ள சந்து பாதையில் வாதிக்கு உரிமை உண்டு அதை பற்றி எங்களுக்கு தாவா இல்லை. வழக்கு சொத்தை பற்றி புரிந்துகொள்ளாமல் நான் தாவா செய்து வருகிறேன் என்றாலும், எனது வீட்டிற்கு பின்புறம் உள்ள சந்து பாதையில் வாதிக்கு உரிமை உள்ளது என்பதை நான் ஒப்புக்கொள்வதாலும், எனது வீட்டிற்கு தென்புறம் உள்ள சந்து பாதையில் வாதிக்கு எந்த உரிமையும் இல்லை என்று நான் தெரிந்து கொண்டு, நான் வீண் தாவா செய்து வருகிறேன் என்றால் சரியல்ல.